பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 24 சனிக்கிழமை 10.12.2022 கதிர் 35

இது ரகசியம் அல்ல!

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ள சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம், முன்னர் குறிப்பிட்டபடி வரும் செவ்வாய்க்கிழமை 13 ஆம் திகதி மாலை 5.30


2

# ரெலோவின் பொறிமுறை யோசனைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். சாதகமான சமிக்ஞை

அரசாங்கத்துடன் ஆரம்பிக்க உள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் சுரேன் அவர்கள் சில பொறிமுறைகள் குறித்து ஊடகத்திற்குத் தெரிவித்திருந்தார். அதில் ஏனைய கட்சிகளும் தமது ஆலோசனைகளை முன்வைக்குமாறும் கோரியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது கருத்துகளை முன்வைத்துள்ளது.

தமது கட்சியின் கருத்துகளை முன்வைத்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ரெலோ அமைப்பு பேச்சுவார்த்தை 2



* யாழ்ப்பாணம் * கிளிநொச்சி * முல்லைத்தீவு

# வடக்கில் 3 மாவட்டங்களில் அறுநூறு கால்நடைகள் சாவு





## மேலும் நானூறு சாப்படுக்கையில் சீரற்றகால நிலை செய்த மோசம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.10

**நாட்டில் அசாதரணமாக நிலவும் கடும் குளிர், விடாத மழை, அதனால் ஏற்பட்ட பெரு வெள்ளம், சுழன்றடித்த புயல் காற்று ஆகிய சீரற்ற காலநிலை காரணமாக கடந்த இரு நாள்களில் மட்டும் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லை தீவு மாவட்டங்களில் சுமார் 600 கால்நடைகள் ஒரேடியாக சாவடைந்து இருக்கின்றன. மேலும் 400 கால்நடைகள் வரை சாப்படுக்கையில் கிடக்கின்றன எனத் தெரிவிக்கப் படுகிறது.**

2

## வடக்கில் 227 வீடுகள் சேதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.09

வடக்கில் நேற்று முன்தினம் ஒரு நாள் வீசிய புயல் காற்றில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 227 வீடுகள் சேதமடைந்துள்ளன என மாவட்டச் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2

## சில நாள்களுக்கு முகக்கவசம் கட்டாயம்

### சுற்றாடல் அமைச்சு அறிவுறுத்து

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தூசுப்படிமம் காரணமாக, எதிர்வரும் சில நாள்களுக்கு முகக்கவசம் அணியுமாறு, சுற்றாடல் அமைச்சின் செயலாளர், விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

2

## யாழ். மாவட்டத்தில் 31 வீடுகள் சேதம்



வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தினால் ஏற்பட்டுள்ள சூறாவளியின் தாக்கத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலையிலிருந்து நிலவிய கடும்காற்றுடனான சீரற்ற வானிலையின் காரணமாக தற்போது வரை 31 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என யாழ்ப்பாணம் மாவட்ட அனைத்து முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜ் தெரிவித்தார்

38 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேர் 2

## இரு வரித் திருத்தங்கள் சபையில் நிறைவேற்றம்

பெறுமதிசேர் வரி சீர்திருத்த மூன்றாம் வாசிப்பு நேற்று நாடாளுமன்றில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 82 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

11

## தமிழக மீனவரின் படகை விடுவித்து மன்னார் நீதிமன்று நேற்று உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.10

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்துப் பிடிக்கப்பட்ட படகை மன்னார் நீதிமன்றம் விடுவித்து

2

# அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சித்தர் வந்தால் அதிகாரப் பகிர்வுக்கு பயன்படுத்தி விடுவாராம்

## அதனால்தான் எதிர்த்தோம் என்கிறார் உதய கம்மன்பில்ல



அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளார் என்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாதீட்டுக்கான வாக்கெடுப்பின் போது அதனைத் தவிர்த்தது. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

"இந்தநிலையில் அவர்களின் பெயர் அரசமைப்புப் பேரவைக்கு பரிந்துரைக்கப்பட்டால், அவர்கள் அந்தப் பேரவையையும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்துக்குப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதற்காகவே, சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது, சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, அதற்கு எதிராக எனது பெயரைப் பரிந்துரைத்தது.

11



காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்குக் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற இருக்கின்றது.

கட்சித்தலைவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்படுவதாகவும் தெரிகிறது.

இந்த அழைப்பு விடயத்தில் சிக்கல் எழக்கூடிய நிலைமை உண்டு. அது குறித்து இன்று அல்லது நாளை விவரம் தெளிவாகும் எதிர்பார்க்கலாம்.

சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இவ்விடயம் குறித்துப் புளொட் தலைவர் சித்தார்த்தன் உரையாடி இருக்கின்றார்.

“ரெலோ, புளொட் ஆகிய இரண்டுக்கும் தனித்தனி ஒவ்வொரு அழைப்பு உண்டு. தவிரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மேலும் இரண்டு அழைப்புகள் இருக்கும்” - என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. (சம்பந்தனையும், சுமந்திரனையும் மனதில் வைத்துக் கூறியிருப்பார் போலும்.)

“இல்லை…இல்லை, அவை இரண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கல்ல. மாறாக, மற்றைய பங்காளி கட்சியான இலங்கை தமிழரசுக்கு!” - என்று ஜனாதிபதியிடம் திருத்தம் கூறினாராம் சித்தார்த்தன்.

இந்தச்சிக்கல் - கட்சிதலைவர்களுக்கு அழைப்பு வழங்குவது பற்றிய விவகாரம் - தமிழர் தரப்புக்குள் நெருக்கடியாக இருக்காது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சி எல்லாவற்றிற்கும் தலா ஒவ்வொரு அழைப்பு அனுப்பப்படும் என்று தெரிகிறது.

ஆனால், ஆளும்தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஒட்டுமொத்தமாக சில அழைப்புகளை கொடுத்து, அவற்றை உங்கள் பங்காளி கட்சிகளின் தலைவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கூறி, தலைமைக் கட்சியான மொட்டுத் தலைமையிடம் ஜனாதிபதி தரப்பு ஒட்டுமொத்தமான அழைப்பை ஒப்படைக்குமானால் சிக்கல் - பிரச்சினை - தானே உருவாகும்.

மொட்டுக் கூட்டணியிலிருந்து வெளியேறி, சுயாதீனமாக - சுயேச்சையாக - இயங்கும் அணிகள் என்று தம்மை அறிவித்துக் கொண்டு, நான்கு. ஐந்து தனிக் குழுக்கள் நாடாளுமன்றில் உள்ளன.

அவற்றுக்கு நேரடியாக அழைப்பு வழங்கப்படுமா, அவை இந்தப் பூர்வாங்க கலந்துரையாடலில் பங்குபற்றுமா என்பதில்தான் இந்த கலந்துரையாடலின் வெற்றி தங்கி உள்ளது.

செவ்வாயன்று பகல் நாடாளுமன்ற அமர்வு உள்ளது. அது முடிந்ததும் மாலையில் இந்தக் கூட்டம்.

கூட்டத்தில் முதலில் தமது திட்டம், உத்தேசம் ஆகியன குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவரம் அளிப்பார் என்றும், பின்னர் கட்சி தலைவர்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்படும் என்றும் விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

“நிகழ்ச்சி நிரல் எப்படி அமையும்? என்ன அடிப்படையில் பேச்சு தொடரும்?” - என்று ஜனாதிபதியுடன் தொடர்புடைய முக்கிய வட்டாரம் ஒன்றிடம் கேள்வி எழுப்பினேன்.

“எல்லாம் ஜனாதிபதியின் ஆரம்ப உரைக்கு பின்னர் தமிழர் தரப்பின் தலைவர் சம்பந்தன் பிரேரிக்கப் போகும் மார்க்கத்தில்தான் எல்லாம் தங்கி இருக்கும்” - என்றார் அவர்.

அப்படி என்றால், பூர்வாங்கத் திட்டமெல்லாம் ஏற்கனவே பூசி மெழுகி, ஒழுங்குபடுத்தி, தயாராகிவிட்டது போல் தான் உள்ளது.

பொறுத்திருப்போம். செவ்வாய் மாலை விவரம் தெளிவாகிவிடும் தானே…..!

- மின்னல் -

## ரெலோவின் பொறிமுறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான பொறிமுறை ஒன்றை 09.12.2022 அன்று பொதுவெளியில் வெளியிட்டிருப்பதுடன் அவை தொடர்பான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ளோரிடமிருந்து கோரியிருக்கின்றது. இந்தக் கோரிக்கை பொதுவெளியில் இருப்பதன் காரணமாக, அதற்கான எமது கருத்துகளையும் ஆலோசனைகளையும் பொது வெளியில் வைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

முதலாவதாக, அரசாங்கம் குறிப்பிட்டுள்ள தமிழர் தரப்பினருடனான பேச்சுவார்த்தையானது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பானதா? அல்லது புதியதோர் அரசியல் யாப்பு தொடர்பானதா? அல்லது வடக்கு - கிழக்கு மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பானதா? என்பதை முதலில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழர் தரப்பும் தாம் எது தொடர்பில் பேசப்போகிறோம் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில்தான் பேச்சுவார்த்தைகளுக்கான ஒருபொறிமுறையை வகுக்க முடியும். ரெலோ அமைப்பு வெளியிட்டுள்ள பொறிமுறையைப் பார்க்கின்றபொழுது, அது தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைக்கான பொறிமுறையாகவே தோன்றுகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு வரையறுக்கப்பட்டாலே அந்தத் தீர்வை உள்ளடக்கியதான அரசியல் யாப்பை உருவாக்க முடியும். ஆகவே அந்த வகையில் அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்பது முதன்மையானது. ஏற்கனவே அரசாங்கம் நியமித்த பல ஆணைக்குழுக்கள் பல அறிக்கைகளைத் தயார்செய்தும் சகல அரசாங்கங்களாலும் அவை குப்பைத் தொட்டியில் வீசியெறியப்பட்டனவேயொழிய அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில், மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் என்பது வரவேற்கப்படக்கூடிய ஒரு விடயமே. ஆனால் அரசாங்கம் உள்நாட்டிலேயே எமது பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாகக் கூறுகின்றது. அதே சமயம் அவர்கள் இதைத் தீர்க்கமாட்டார்கள் என்பதை வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

எனவே, உண்மையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இலங்கை அரசாங்கம் இதயசுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால், அது மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த பேச்சுவார்த்தைகளுக்கு முன்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் போன்ற கட்சிகளும் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தன. அந்த வகையில், காணிகள் தொடர்ந்து பறிமுதல் செய்வதை நிறுத்துவதுடன், யுத்தத்தின் பொழுதும், அதன் பின்னரும் மக்களிடம் இருந்து கபளீகரம் செய்யப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடமே கையளிப்பதற்கான காலவரையறை ஒன்றை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கால எல்லை மிகக்குறுகிய காலஎல்லையாக இருத்தலும் வேண்டும்.

இரண்டாவதாக, 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்து இயற்றப்பட்ட அதிகாரப்பகிர்விற்கான சட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்படல் வேண்டும். ஏற்கனவே இவை சட்டங்களாக இருப்பதன் காரணத்தினால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி காலதாமதமின்றி இவற்றை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும் செய்ய முடியும்.

மூன்றாவதாக, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான ஒருகுழுவினை தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள் இணைந்து உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறான தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமான கருத்துகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில், இந்தத்துறையில் பரிச்சயம் பெற்ற, நிபுணத்துவம் பெற்றவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நிபுணத்துவம் உள்ளவர்களையும், புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்கியும் ஓர் ஆலோசனைக்குழுவும் அமைக்கப்படல் வேண்டும். இவை தவிர, இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பிரதிநிதிகள், அமெரிக்க, ஐரோப்பிய பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு குழுவானது மத்தியஸ்தம் வகிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடலாம். இவை தொடர்பாக இந்தியா, ஐ.நா. மற்றும் ஏனைய நாடுகளுடன் பேசி அத்தகையதொரு நிலைமையைத் தோற்றுவிக்க முயற்சிக்க வேண்டும். இவை பேச்சுவார்த்தை தொடர்பான சில அடிப்படையான அம்சங்கள் என்பதை முன்வைக்க விரும்புகின்றோம். - என்றுள்ளோம்.

## வடக்கில் 3 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோக பூர்வமாக செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 367 கால்நடைகள் உயிரிழந்துள்ளன என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அதிக குளிருடன் கூடிய காலநிலையின் காரணமாக ஒரே நாளில் அதிக கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் 168 கால்நடைகள் உயிரிழந்துள்ள அதே நேரம் மேலும் 162 கால் நடைகள் முழுமையாக இயங்காத நிலையில் வீழ்ந்து கிடக்கின்றன. இருப்பினும் சிகிச்சைகள் இடம்பெறுகின்றது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 120 கால்நட்டைகள் உயிரிழந்துள்ளன. 159 கால்நடைகள் படுக்கையில் விழுந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 மாடுகளின் உயிரிழப்பு உறுதிசெய்யப்பட்டுள்ள அதேநேரம் 17 மாடுகள் அதிக நோய் வாய்ப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பிரிவில் வரும் மருதங்கேணியில் ஒரு பட்டியில் மட்டும் 58 உயர் இன ஆடுகள் கூண்டோடு மரணித்துள்ளன.

இதேநேரம் அதிக நோய்வாய்ப்பட்ட எஞ்சிய 338 கால் நடைகளிற்கும் சிகிச்சை அளிப்பதற்கான மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதிலும் பெரும் நெருக்கடி நிலை அல்லது தட்டுப்பாடு நிலவுவதாக கால் நடை வளர்ப்பு உரிமையாளர்கள் எமக்கு தெரிவிக்கும்போது எம்மாலும் உடனடியாக மாற்று ஏற்பாடுகளை செய்ய முடியவில்லை என்றார் பணிப்பாளர் சி.வசீகரன்.

## வடக்கில் 227 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் 141 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 36 வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் 31 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 7 வீடுகளும். மன்னார் மாவட்டத்தில் 12 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

## சில நாள்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தூசுப் படிமங்கள், நாள்தோறும் பெரும்பாலும் குறைவடைந்து செல்லும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி நகரும் காற்றின் மாசு அளவு, படிப்படியாக குறைவடையும் என்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வளிமண்டல மாசு நிலை விரைவில் நீங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். மாவட்டத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 2 சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சண்டிலிப்பாயில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம், உடுவில் பகுதியில் உள்ள புற்றுநோய் பராமரிப்பு நிலையை பெண்கள் விடுதியில் ஒரு பகுதி ஆகியன சேதமடைந்துள்ளன எனவும், குறிப்பாக நல்லூர், பருத்தித்துறை, ஊர்காவற்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிப்புகள் கூடுதலாக உணரப்பட்டுள்ளன.

மழை வீழ்ச்சி தொடர்ச்சியாக இன்று வரை எதிர்பார்க்கப்படுவதனால் பொது மக்கள் தமக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் தெரிவித்தார்.

## தமிழக மீனவரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பளித்துள்ளது.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி மன்னார் கடலில் மீனவர்களுடன் பிடிக்கப்பட்டு மன்னார் நீதிமன்றின் உத்தரவின் பெயரில் விளக்க மறியலில் வைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பெயரில் 10 வருடங்களிற்கு ஒத்தி வைக்கப்பட்ட 3 வருட சிறைத் தண்டனையின் அடிப்படையில் நாடு திரும்பினர்.

இருந்தபோதும் இப் படகில் வந்த ஒருவர் படகு உரிமையாளர் சார்பில் தத்துவ உரிமை பெற்று படகை விடுவிக்கக்கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இருந்த போதும் படகின் உரிமையாளரே நேரில் வர வேண்டும் என நீரியல் வளத் திணைக்களத்தின் சார்பில் மன்றில் கோரப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் படகின் உரிமையாளர் மன்னார் நீதிமன்றிற்கு நேரில் சமூகமளித்தார்.

இதன்போது படகு பிடிபட்ட தினத்திற்கு சில நாள்களிற்கு முன்பு பொருத்திய இயந்திரப் பகுதி ஒன்று பழுதடைந்த காரணத்தினாலேயே படகு திசைமாறி வந்ததாகவும் படகு கடற்படையினரால் பிடிக்கப்படும் போது படகு கடல் உணவு வகைகளையும்

(11ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

# சாணக்கியனுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!









நாடாளுமன்ற உறுப்பினர் இரசமாணிக்கம் சாணக்கியனுக்கு எதிராக கொழும்பில் போராட்டம் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சீனாவிற்கு ஆதரவு தெரிவித்து நவ ஜனதா பெரமுன குழுவினர் கொழும்பிலுள்ள சீன தூதரகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் 'கோ ஹோம் சீனா' என்று சீனாவிற்கு எதிராகக் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அவரின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நவ ஜனதா பெரமுன குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதுதாம்சீனாவைஆதரிக்கின்றோம் எனவும் சாணக்கியனின் கருத்தை எதிர்க்கின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டுக் கடன்களை செலுத்தாமல் எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது!



## அநுரகுமார சுட்டிக்காட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பார் என நகைச்சுவை கருத்தை சபையில் குறிப்பிடுகின்றமையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் தான் தற்போது எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதுவே நாட்டின் பொருளாதார உண்மை நிலை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது புதிய விடயமல்ல. பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பேச்சளவில் குறிப்பிடுகிறதே தவிர நடைமுறையில் எந்த திட்டங்களும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. உண்மைக் காரணிகளை மறைத்ததால் நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டது என்பதை அரசாங்கம் மறந்து விடக் கூடாது.

எரிபொருள்,எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை இல்லை. அத்தியாவசியப் பொருள் இறக்குமதி தடையில்லாமல் இடம்பெறுகிறது. ஆகவே பொருளாதார பாதிப்பை முகாமைத்துவம் செய்து கொண்டோம் என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது, நாங்கள் வங்குரோத்து நிலை அடைந்து விட்டோம் என அரசாங்கம் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி அறிவித்தது. செலுத்தாத கடன் தொகையைக் கொண்டு எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்யப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் அரசமுறை கடன்களை செலுத்திய நிலையில் தான் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருள் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டது, ஆனால் தற்போது வெளிநாட்டு கடன்களைச் செலுத்தாமல் எரிவாயு,எரிபொருள் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே நாட்டின் இன்றைய பொருளாதார உண்மை நிலை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பார் என நகைச்சுவை கருத்தை சபையில் குறிப்பிட வேண்டாம்.

பொருளாதாரப் பாதிப்பு மூடி மறைக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரி அதிகரிப்பால் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது பொருளாதார பாதிப்பை மேலும் தீவிரப்படுத்தும். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். – என்றார்.

# பொருளாதார ரீதியில் முன்னேற விஞ்ஞான வளர்ச்சி வேண்டும்!

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி ஆலோசனை

பொருளாதார ரீதியில் முன்னேற விஞ்ஞான துறையில் வளர்ச்சி வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் தலைவருமான வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஞ்ஞான கூடத்தில் ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் நாங்கள் முன்னோக்கி செல்ல வேண்டுமேயானால் விஞ்ஞான துறையில் நாங்கள் கட்டாயமாக வளர்ச்சி காண வேண்டும். பாடசாலை மட்டங்களில் விஞ்ஞானரீதியான போட்டிகள் ஒரு பாலமாக அமைகின்றன. இந்த பாலத்தில் அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து கொள்ள வேண்டும். சிறிய பாடசாலைகள், பெரிய பாடசாலைகள் இல்லாது வர்க்கம் அல்லாது அனைத்து பாடசாலைகளும் இதில் இணைந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய மாணவர்களை இதில் பங்கு பற்ற ஊக்குவிக்க வேண்டும்.

பாடசாலை மாணவர் மத்தியில் விஞ்ஞான பாட



அறிவை வளர்க்க வேண்டும். இந்த நிகழ்வுகளைச் செய்வதற்கு தேவையான நிதி உதவிகளையும் ஆதரவையும் இரண்டு நிறுவனங்கள் நமக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. பல வருடங்களாக இந்த நிதி உதவியினை வழங்கி வருகின்றார்கள்.

இன்றைய காலத்தில் விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளைத் தெரிவு செய்பவரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.

இதனை விருத்தி செய்வதற்காக முக்கியமாக விஞ்ஞான பீடத்தால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனை விடக் கூடுதலாக மாணவர்கள் அவர்களுடைய எதிர்காலத்தில் என்னவாக வரப்போகிறார்கள் என்ற சம்பந்தமான பல விழிப்புணர் நடவடிக்கைகளை திட்டங்களை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகியுள்ள நிலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கை முறைமையை விருத்தி செய்வதற்கு அந்த வாழ்க்கை திறனைசிறப்பாகக் கொண்டு போவதற்கான முயற்சிகளைச் செய்வதிலும் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் அதனூடாகவும் இவர்களுடைய எதிர்காலத்தில் என்னவாகப்போகின்றார்கள் என்பதை விருத்தி செய்வதற்கான முயற்சிகளையும் பல்கலைக்கழகம் அனைத்து பீடங்களுடன் இணைந்த திட்டமாக சமூகத்திற்கு எடுத்து செல்வதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். – என்றார்.

# உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நாட்டுக்கான அரிசி இறக்குமதி நிறுத்தம்!

## ஜனாதிபதி ரணில் அதிரடி உத்தரவு



இலங்கைக்கான அரிசி இறக்குமதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்த கோரிக்கையைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி, இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் 12 ஆவது நாளில், எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படாது என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டிருந்தார்.

பெரும்போகத்திற்குத் தேவையான உர விநியோகம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் தினம்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். மனித உரிமகளை நிலைநாட்ட நாம் பிரதிக்ஞை எடுக்கும் நாள்.

கருத்துச் சுதந்திரம், எழுத்துரிமை, கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர், உணவு, சுத்தமான சூழல் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்று சுதந்திரமாக, கௌரவத்துடன் உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

இனம், நிறம், மொழி, பாலினம், அரசியல் நிலைப்பாடு, ஜாதி, மதம், பிறப்பு, சொத்து, பிற அந்தஸ்து, தேசிய அல்லது சமூகத் தோற்றம் என எதிலும் பாகுபாடு பார்க்கக்கூடாது என்பதை உணர்த்துவதே இந்தத் தினத்தை கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கமாகும்.

மனித உரிமை என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும்.

குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள், வாழும் உரிமை, சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமநிலை, நகர்வுச் சுதந்திரம், பண்பாட்டு உரிமை, உணவுக்கான உரிமை, கல்வி உரிமை என்பன முக்கியமானவை. மனிதனின் இன்றியமையாத தேவைகளான நீர், நிலம், காற்று. உறைவிடம், பிறப்பு மற்றும் வாழுதல் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டும் அந்தந்த நாட்டின் மூலச்சட்டங்களையும் கருத்தில் கொண்டும் இந்த மனித உரிமைகள் வடிவமைக்கப்படுகின்றன.

ஐ.நா., சபையால் 1948 டிசம்பர்ச 10 ஆம் திகதி உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் ஏற்று கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டு – அதாவது அடுத்த வருடத்தில் – 75 ஆவது மனித உரிமை தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட உள்ளது.

இந்த ஆண்டு 'அனைவருக்கும் மனித மாண்பு, சுதந்திரம், நீதி' என்பதை அடிப்படைக் கருத்தாக – மகுட வாக்கியமாக – ஐ.நா. சபை அறிவித்து, இந்தத் தினத்தை முன்னெடுக்கின்றது.

ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையைப் பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதுமே இந்த மகுட வாக்கியத்தின் முக்கிய கருத்தாகும்.

'அனைவருக்கும் மனித மாண்பு, சுதந்திரம், நீதி' என்று இந்த ஆண்டின் மகுட வாக்கியமாக அமைந்தாலும் அது இலங்கையருக்கு – குறிப்பாக இலங்கையின் சிறுபான்மையின மக்களுக்கு – எட்டாக் கனியாக எப்போதும் இருப்பதே அவர்களின் துரதிர்ஷ்டமாக உள்ளது.

# பலாலியில் இருந்து சென்னைக்கான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்!

இரண்டு வருட இடைவெளியின் பின்னர், யாழ்ப்பாணம் – பலாலியில் இருந்து சென்னைக்கான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக சென்னைக்கும் பலாலிக்கும் இடையே வாரமொன்றில் நான்கு விமானங்கள் இயக்கப்படவுள்ளன. எதிர்வரும் 12 ஆம் திகதி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான விமான போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை விமான போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்பட்ட நிலையில், கொவிட் தொற்று காரணமாக விமான போக்குவரத்து கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சதவீதமாக அதிகரித்தது!

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் நிகழும் நாடுகளில் இலங்கை 6 ஆவது நாடாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

தென்கிழக்கு ஆசியாவில் சர்வதேச பொலிஸாருடன் தொடர்புடைய என்.ஏ.ஆர்.சி. வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் 30 பாதாள உலகக் குழுக்கள் உள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் 62 லட்சம் பேருக்கு மனிதாபிமான உதவிகள் தேவை!

## யுனிசெவ் தகவல்

இலங்கையில் 62 லட்சம் பேருக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்களில் 29 லட்சம் குழந்தைகளும் அடங்குகின்றன என குழந்தைகளுக்கான மனிதாபிமான நடவடிக்கை தொடர்பான யுனிசெவ் நிறுவன அறிக்கை தெரிவித்துள்ளது.

பணவீக்கம் அதிகரித்து வருவதால், பாதுகாப்பான வருமானம் இல்லாத குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளையேனும் பூர்த்தி செய்ய முடியாமல் தவிக்கின்றன எனவும் 53 லட்சம் மக்கள் ஏற்கனவே உணவைத் தவிர்த்து வருகின்றனர் எனவும், எதிர்வரும் மாதங்களில் இந்த எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும் எனவும் யுனிசெவ் நிறுவனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார சவால்கள், உணவு பணவீக்கத்தால் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வருகை கணிசமாகக் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலாசார விழாவும் 'வவுனியம்' நூல் வெளியீடும்




வவுனியா, டிசெ. 10

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வவுனியா பிரதேசசெயலகம் மற்றும் கலாசாரபேரவையும் இணைந்து நடத்திய வவுனியா 'பிரதேச கலாசார விழா' கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் நா.கமலதாசனின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி முதன்மை அதிதியாக கலந்துகொண்டார்.

மங்கள இசை முழங்க விருந்தினர்கள் மற்றும் கலைஞர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. நிகழ்விற் கான தலைமை உரையை தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்த வரவேற்புரையை உதவி பிரதேச செயலாளர் ச. பிரியதர்சினி வழங்கினார். வரவேற்பு நடனத்தை நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் வழங்கியிருந்தனர்.

இதன்போது வவுனியாவின் கலை பண்பாடு, கலாசாரம் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொடர்ச்சியாக வவுனியா பிரதேசத்தின் மொழி, கலை, கலாசாரம், இயல், இசை, நாடகதுறையில் சாதனை புரிந்தவர்களிற்கான 'கலாநேத்ரா' விருதும் வழங்கிவைக்கப்பட்டது. அத்துடன், பிரதேச செயலகத்தின் இந்த வருடத்துக்கான வவுனியம் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வலயகல்வி பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, கலாபூசணம் கனகசபை கோபாலன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# நகர வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முடிக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்பு!

## பிரசன்ன ரணதுங்க விடுத்தார்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை விரைவாக முடிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்நிலையில் அவர் தெரிவித்தவை வருமாறு –

இந்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை 48,491 மில்லியன் ரூபாவாகும். இதில் 2,744 மில்லியன் ரூபா தொடர் செலவுகளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்த தொகையில் 43,740 மில்லியன் ரூபா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 20,433 மில்லியன் ரூபாவும், வீடமைப்பு அபிவிருத்திக்காக 16,057 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு 7,250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 4 திணைக்களங்களுக்கு மொத்தமாக 2,007 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தற்போது 'உங்களுக்கு வீடு; நாட்டுக்கு நாளை' உதவி வீடமைப்புத் திட்டம், சபிரி அடுக்குமாடி வீடமைப்புத் திட்டம், சபிரி கிராமத் திட்டம், நடுத்தர வர்க்க பசுமை அடுக்குமாடித் திட்டம், நிழல் உதவி வீட்டுத் திட்டம், சோலார் பேனல் வீட்டுத் திட்டம், பழைய அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம் போன்ற பல வீட்டுத் திட்டங்களை செயற்படுத்துகிறது.

மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையால் 100 நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய 183 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேலும், குறைந்த வருமானம் பெறும் வீட்டுத் திட்டங்கள், மலிவு வீட்டுத் திட்டங்கள், நடுத்தர வருமானம் பெறும் வீட்டுத் திட்டங்கள், நகர்ப்புற மறுமலர்ச்சிக்கான ஆதரவுத் திட்டங்கள் போன்ற திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பணத்தை நிர்வகித்து, அடுத்த வருடம் இந்தத் திட்டங்கள் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், கொவிட் 19 நோய்க்குப் பின்னரான சூழ்நிலையிலும், நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறையைப் பாதுகாத்து, அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான நடைமுறை வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி, புதிய திட்டங்களை தொடங்குவதற்கு முன் செயல்படுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வீடமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை விரைவாக முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த 100 கோடி ரூபா செலவு!

உள்ளூராட்சி தேர்தலை நடத்த அண்ணளவாக, 100 கோடி ரூபா செலவு ஏற்படுமென தேசிய தேர்தல் ஆணையம் மதிப்பீட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தினூடாக இந்தச் செலவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணையகத்தின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் டிசெம்பர் இறுதி வாரத்தில் கோரப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி அமைப்புகளின் தேர்தல் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி வேட்புமனுக்கள் கோரப்படும் என்று தேசிய தேர்தல் ஆணையம் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மட்டத்தில் 2022 வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் அதன்படி 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# 40 கோடி ரூபா பெறுமதியுடைய தங்கத்துடன் நால்வர் விமான நிலையத்தில் வைத்து கைது!

40 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் நால்வர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

22 கிலோகிராம் கடத்தல் தங்கத்துடன் நான்கு இலங்கையர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போதே, அவர்கள் சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தங்கம், சுங்க பிரிவினரின் சோதனை நடவடிக்கையின் போது, கைதானவர்களின் பொருட் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர்கள், டுபாயில் இருந்து இந்தியாவின் சென்னை வழியாக இலங்கைக்குள் வந்தவர்கள் என நம்பப்படுகிறது.



# கோட்டாவின் ஆட்சிக் காலத்தின் போது நாட்டுக்கு 5,978 பில்லியன் ரூபா நட்டம்!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் போது, 5,978 பில்லியன் ரூபா நட்டமேற்பட்டதாக, இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை உடனடியாக நிறுத்தியதால் இந்த நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 செப்ரெம்பர் 21 ஆம் திகதி கோட்டாபய ஜனாதிபதிக்கு அப்போதைய ஜனாதிபதி செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தைத் தொடர்ந்து, ஜப்பானின் இந்தத் திட்டம் பொருத்தமான செலவு குறைந்த போக்குவரத்து தீர்வாக இல்லை என்று குறிப்பிட்டு, அது இடைநிறுத்தப்பட்டது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், 12 வருட சலுகைக் காலம் உட்பட 40 வருட காலப்பகுதியில் இந்தத் திட்டத்துக்கான கடனைச் செலுத்தும் வசதியை வழங்கியிருந்தது. இதற்கான வருடாந்த வட்டி வீதம் 0.1 சதவீதமாக இருந்தது.

இதேவேளை 2021 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் இந்தத் திட்டம் தொடர்பில் 60 கோடியே 40 லட்சம் ரூபாவை நிலுவையாக செலுத்தவேண்டியிருந்தது. எனினும் இன்னும் அது செலுத்தப்படவில்லை.

## 14 வயதுச் சிறுமி குழந்தை பிரசவம் 73 வயது முதியவர் விளக்கமறியலில்!

### யாழில் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருநகர் பகுதியில் வசித்துவந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணம் என்ற சந்தேகத்தில் 73 வயதான முதியவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முதியவர் சிறுமியின் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் என்பதுடன், சிறுமியுடன் நெருங்கி பழகியவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## பெண்ணுக்கு சாரத்தை உயர்த்திக் காட்டிய உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 10

பெண் ஒருவருக்கு தனது சாரத்தை உயர்த்திக் காட்டிய குற்றச்சாட்டின்பேரில் வலல்லாவிட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என இத்தபான பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாடு செய்த பெண்ணின் வீட்டுக்கு அருகே உள்ள காணியில் விறகு வெட்டும் போது ஏற்பட்ட வாக்குவாதத்தில், முறைப்பாட்டாளரைக் கடுமையாகத் திட்டியதோடு, சந்தேக நபர் தான் அணிந்திருந்த சாரத்தை உயர்த்திக் காட்டினார் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காற்று மாசடைகின்றமை தொடர்பில் யாழ். மக்கள் பீதியடைய வேண்டாம்!

### வைத்தியர் ஜமுனானந்தா தெரிவிப்பு



காற்று மாசடைவது தொடர்பில் யாழ்ப்பாண மக்கள் பீதியடையத் தேவையில்லை என யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி. ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தின் தரவுகளின் அடிப்படையில், காற்று மாசடைவு வீதம் அதிகளவில் காணப்படுகின்றது. அது தொடர்பில் வினாவிய போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

சுற்றுப்புறக் காற்று தர கண்காணிப்பு நிலையத்தின் தரவின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் காற்று மாசடைவு வீதம் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் மக்கள் பயப்படத் தேவையில்லை. கொழும்பு நகரில் வாகன நெரிசல் அதிகமாக இருக்கும். அந்த சுட்டெண் அதிகமாகக் காணப்படும். அந்த இடங்களில் முகக் கவசங்கள் அணிவது நல்லது.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதற்குரிய பயம் தேவையில்லை. முகக் கவசம் கட்டாயம் அணியதேவையில்லை. ஆனால் அணிவது தவறில்லை.

நாங்கள் மக்களை பயப்படுத்தக் கூடாது. தற்போது தாழமுக்க சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுள்ள கால நிலையால், தான் இந்த குளிர்ச்சூழல் அதிகமாகக் காணப்படுகின்றதே தவிர மக்கள் இந்த வளி மாசடைந்ததன் காரணமாக இந்த நிலை ஏற்படவில்லை என்பது தான் உண்மை. – என்றார்,




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** தமிழ் நாட்டு அரசியல் பற்றி தாக்கமான கருத்துகளை எழுதி வருகிறீர்கள். வேற்று நாட்டவரான உங்களுக்கு எங்களின் அரசியல் பற்றிக் கருத்துரைக்க என்ன அதிகாரம் இருக்கிறது என்று அங்குள்ள யாரேனும் கேட்டால், என்ன சொல்வீர்கள்?

**பதில்:-** கேட்பார்களா என்ன? கேட்கவிடுவேனா என்ன? எங்கள் இனத்தின் அரசியல் தலைவிதி முழுவதையும் இன்றுவரை அவர்கள் தானே நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதில் தொடங்கி, எங்களின் அரசியல், சமூகம் சார்ந்த விடயங்கள் அனைத்தைப் பற்றியும் எங்களை விட அவர்கள் தானே அதிகம் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

நம் ஈழத்தமிழர் பிரச்சினையைப் பேசும் தலைவர்கள் என்று சில தலைவர்களை அங்குள்ளவர்கள் அடையாளப்படுத்தியே வைத்திருக்கிறார்கள். நமது பிரச்சினையில் மாநில அரசு தொடங்கி மத்திய அரசு வரையும் காட்டும் அக்கறையை எவரேனும் மறுக்கமுடியுமா?

அங்குள்ள தலைவர்களும் சஞ்சிகைகளும் ஊடகங்களும் தனி அமைப்புக்களும் அன்று தொட்டு இன்று வரை ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி விரிவாய் விமர்சித்து வருவதை அவர்கள் அறியமாட்டார்களா என்ன? எங்கள் அரசியலை அவர்கள் விமர்சிக்கலாம் என்றால், அவர்களின் அரசியலை நாம் விமர்சிப்பதில் என்ன தவறு இருக்கப்போகிறது? ஒன்றே ஒன்று, அவர்களின் விமர்சனங்களில் சுயநலத்துடன் கூடிய பக்கச்சார்பு இருக்கும். எனது விமர்சனத்தில் அது இருக்காது என்பது மட்டும் திண்ணம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'எனக்கு வந்தா தக்காளிச் சட்னி; உனக்கு வந்தா ரத்தமா?' கதைதான்.**

**2. கேள்வி:-** உங்கள் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் அவர்களுக்கு இலங்கைக் கலைக்கழகத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பதவி கிடைத்திருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** சிங்கம் காட்டிற்கு ராஜாவானது எலி பிடிப்பதற்கல்ல!



பிரசாந்தனுக்கு வரும் உயர்வுகள் அத்தனைக்குமாய் முதலில் மகிழ்பவன் நான். இந்தப் பதவிகள் எல்லாம் அவருக்குக் கிடைக்கும் இடைப்பயன்கள்தான். அவர் அடையவேண்டிய மூல பயன் வேறு. பிரசாந்தனால் தமிழ்மொழி மீள புத்துயிர்ப்புப் பெறவேண்டும். இவரின் பெயர் சொல்லி ஆற்றல்மிக்க ஓர் தமிழறிஞர் பரம்பரை உருவாக வேண்டும். இவரது இருப்பால் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, மற்றைய பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளால் எட்டிப்பிடிக்க முடியாத உயரத்திற்குப் போகவேண்டும். இவையெல்லாம் நடக்கிறபொழுதுதான் என் மனம் நிறைவும் மகிழ்வும் கொள்ளும். இந்த உயர் இலட்சியத்தின் முன் இப்பதவிகள் எல்லாம் என்னைப்பொறுத்தவரை வெறும் ஜுஜுப்பிகள் தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்ல. ஹி..ஹி..!**

**3. கேள்வி:-** வடமாகாண மாணவர்கள் ஓ.எல் பரீட்சையில் 9 A ஐ வாரிக்குவித்திருக்கிறார்களே. அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** பெருமையால் தலைநிமிர்கிறது. பலதசாப்தங்களாய்ப் போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் செய்திருக்கும் சாதனை அது. கவிஞர் மஹாகவி எழுதிய 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனும் தொடரை நிஜப்படுத்தி இருக்கிறார்கள். ஆனாலும் முழுமையாய் மகிழ முடியவில்லை. யாழிலிருந்து வரும் போதைவஸ்து பற்றிய செய்திகள் நெஞ்சை நடுங்க வைக்கின்றன. பயிர்கள் செழித்துவளர்ந்து என்ன பயன்? கொடிய பூச்சிகள் அதை அழிக்கத் தொடங்கினால் அத்தனையும் வீண் அல்லவா? அதுபோல சாதனை செய்து கல்வி உலகில் பயணிக்கத் தலைப்படும் இப்பிள்ளைகளுக்கு, போதை விஷம் ஊட்டுவதற்கு பாடசாலைகளுக்குள்ளும் கல்லூரிகளுக்குள்ளும் ஒரு கூட்டம் தமது கரம் பரப்பி நிற்பதை அறிகிற பொழுது இளைஞர்களின் மேற்சாதனை வீணாகி விடுமோ என்று அஞ்சவேண்டி இருக்கிறது.

உண்மையான இன அக்கறை இருந்தால், தமிழ்கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் ஒருவரோடு ஒருவர் போராடுவதை விட்டுவிட்டு இந்தத் தீமைக்கு எதிரான போரினை உடன் தொடங்கவேண்டும். தொடங்குவார்களா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் கெடவே...**

**4. கேள்வி:-** தமிழ்நாட்டு பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அண்ணாமலையைப் பாராட்டி எழுதியிருந்தீர்கள். அவரது தலைமையில் குறையேதும் இருப்பதாய் உங்களுக்குப் படுவதில்லையா?

**பதில்:-** இந்தக் கேள்விக்கு நான் பதில் எழுதினால், சென்ற வாரம் அண்ணாமலையை உயர்த்தியதைச் சமன் செய்வதற்காக, யாருக்கோ அல்லது எதற்கோ பயந்து, இந்தவாரம் அவரை விமர்சித்து எழுதுவதாய் நினைக்கப் போகிறார்கள். அந்த நினைப்பில் துளியளவேனும் உண்மையில்லை என்பதை முதலில் பதிவு செய்து விட்டு, உங்களின் கேள்விக்கு வருகிறேன்.

குறையில்லாத நிறை என்பது இறைவனைத் தவிர வேறெவருக்கும் இருக்க முடியாத ஒன்று. நன்மை, தீமை கலந்தது தான் இவ்வுலகம். நிறையுள்ள மனிதர்களிடம் குறையில்லாமல் இருப்பதில்லை. அதுபோலவே குறையுள்ள மனிதரிடமும்



நிறையில்லாமல் இருப்பதில்லை. இது உலகியற்கை.

சென்றவாரம் அண்ணாமலையின் நிறைவுகளைப் பட்டியல் இட்டிருந்தேன். அதற்கு என்னை பாராட்டியும் திட்டியும் பலர் 'கொமென்ஸ்' போட்டிருந்தார்கள். தமிழ், தமிழ் என்று உயிரை விடுகிறவர்கள், நான் ஓர் தமிழனைப் பாராட்டியதைப் பொறுக்கமுடியாமல் இருப்பதைக் காணக் கவலையாயிருந்தது.

அண்ணாமலை பற்றி நான் சென்ற வாரம் சொன்னவை அத்தனையும் நிஜங்கள் என்பதை மீண்டும் ஒருதரம் உறுதி செய்துவிட்டு, இனி அவர் செயற்பாட்டில் தெரியும் சில குறைகளை இங்கு பட்டியல் இடுகிறேன்.

* அண்ணாமலை பெரும்பாலும் எதிரணியினரின் பலவீனங்களையே தன் அணியின் பலமாக்கி வருகிறார் என்பது முதல் குறை. இந்த அவரது போக்கு கட்சியின் நீண்ட கால வளர்ச்சிக்குப் பயன் செய்யாது என்பது என் கருத்து. மற்றவர்களின் குறைகளைக் காட்டித் தாம் உயர நினைப்பது உண்மை உயர்வாகாது.

* இன்னும் கட்சியின் உள்ளூர்த் தலைவர்களைத் தன் கட்டிற்குள் கொண்டு வரவில்லை என்பது அடுத்த குறை.

* தென் மாநிலங்களில் பெரும்பாலும் மாநிலத் தலைமைகளே முதன்மை பெற்று நிற்பது வழக்கம். மத்திய அரசின் அங்கமாய்ச் செயற்பட்டாலும், மாநிலத் தலைமைகள் தம்மை அடையாளப்படுத்தி சுயம் பேணியே நின்றன. தமிழ்நாட்டில் இன்றுவரை பாரதீய ஜனதாக்கட்சியின் சார்பில் சுயம்பேணி நிற்கும் தலைவர்கள் பெரும்பாலும் இல்லை எனும்படியாய்த் தான் இருக்கின்றனர். ஓரளவு சுயம்பேணி நிற்கும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியசுவாமி, இடையிடையே விடும் அறிக்கைகள், இவர் சுயம் பேணாமல் இருப்பதே நல்லது என்று எண்ண வைக்கின்றன. இந்நிலையை மாற்றி பாரதீயஜனதாக்கட்சிக்கு தனித்த மாநில அடையாளத்தை ஏற்படுத்தாமல் இன்றுவரை மத்திய அரசில் கரைந்து நிற்பது அடுத்த குறை.

* பிரதமர் மோடியைக் காட்டியே இன்றும் அவரால் கட்சி வளர்க்க முடிகிறது. இதோ பார் என்று விரல் நீட்டிக்காட்ட, போற்றத்தக்க மாநிலத் தலைவர்கள் எவரையும் இனங்காட்ட முடியாமல் இருப்பது அடுத்த குறை.

* மாநிலத்தில், மத்திய அரசின் பிரதிநிதியாய்ச் செயல்படுவதில் வெற்றிகண்டுள்ள அண்ணாமலை, மத்திய அரசில் மாநிலத்தின் பிரதிநிதியாய் வலிமையாய் முகம் காட்டத் தவறியிருப்பது அடுத்த குறை.

* தன்தன் குடும்பவாரிசுகளை அரசியலில் கொண்டுவர நினைப்பது பிழைதான். ஆனால் பொது வாழ்வில் எனக்கு அடுத்தது இவர்தான் என வாரிசுகளை இனங்காட்டாமல் இருப்பதும் தவறே. இவரும் தனக்கு அடுத்தடுத்த தலைமைக்குரியவர்களை இன்னும் சரியாக இனங்காட்டாதது அடுத்த குறை.

* மாநிலங்களின் சுயாட்சியை மத்திய அரசுகள் விழுங்கப் பார்க்கின்றன என்று தமிழ்நாட்டளவில் ஓர் கருத்து ஆழப்பதிந்துள்ளது. அதில் உண்மை இல்லாமலும் இல்லை. அப்படியிருக்க மக்கள் பிரதிநிதியாய் அல்லாமல் மத்திய அரசின் பிரதிநிதியாய் மட்டும் இவர் தன்னைக் காட்டி நிற்பது அடுத்த குறை.

* வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படையில் இந்து மதத்தின் மீது திராவிட கழகங்கள் சாட்டி வரும் முரண்பாடான கருத்துக்களை கருத்து ரீதியாக ஆழமாக மறுக்காமல் இருப்பது அடுத்த குறை.

இந்தக் குறைகளை நீக்காத பட்சத்தில், அடுத்த தேர்தலில் மிஞ்சிமிஞ்சிப்போனால் வெற்றியின் அளவை ஓரளவு அதிகரித்துக் காட்டலாமே தவிர, ஆட்சிக்கட்டிலில் ஏற முடியுமா என்பது ஐயத்திற்குரிய ஒன்றேயாம். புத்திசாலித்தனமாகக் கூட்டணி அமைத்தாலே அன்றி, அந்த நினைவு சாத்தியப்படுதல் அரிதாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அண்ணாமலையார் வாரிதியார் கூறும் செவிகைக்கும் சொற்களைப் பொறுப்பாரா?**

**5. கேள்வி:-** சபரிமலை நோக்கிய ஐயப்ப பக்தர்களின் பெரும் அணிவகுப்பு எதனைக் காட்டுகிறது?

**பதில்:-** ஆயிரம் புத்திசாலிகள் அணிவகுத்துநின்று தடுத்தாலும், ஆன்மீகத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதைத்தான் காட்டுகிறது. ஆயிரம் ராசாதி ராசாக்கள் வந்தாலும் நம் சமயத்தை அசைக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம். ஓடி முயற்சித்தவர்களை இருந்து வென்று காட்டுகிறது ஆன்மீகம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சாமியேய்ய் சரணம் ஐயப்பா...!**

காலைக்கதிர் Kalaikkathir

# ஒதுக்கும் நிதி உண்மையில் இராணுவ சிப்பாய்களை சென்றடைகின்றதா என்பதை ஆராய்தல் வேண்டும் !

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



நாட்டில் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்துள்ள நாட்டு மக்களுக்கான நலன்புரி சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இராணுவத்தின் உயர் அதிகாரிகளின் சீருடை பிரான்ஸ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற 'சர்வஜன நீதி' ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 4 ஆயிரத்து நூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணுவ சிப்பாய்களின் நலனுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. ஆனால் ஒதுக்கப்படும் நிதி உண்மையில் இராணுவ சிப்பாய்களை சென்றடைகின்றனவா என்பதை ஆராய வேண்டும்.

இராணுவ உயர் அதிகாரிகளின் குடும்பத்தினர் நவநாகரிக பொருள் கொள்வனவுக்கு செல்லும் போது அரச செலவுடன் அவர்களுக்காக இராணுவச் சிப்பாய்கள் காத்திருக்கும் நிலை காணப்படுகிறது.

இவ்வாறான அடிப்படை முறையற்ற செயற்பாடுகள் முதலில் திருத்திக் கொள்ளப்பட வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ள பின்னணியில் நேரடி வரி அறவிடலால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்படவில்லை. 2023ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் நடுத்தர மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் சிகரெட் விற்பனை விலைக்கும், சிகரெட் நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் வரிகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது. பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரி அதிகரிப்பிற்கான வரைவுகளைத் தயாரிக்கும் அரசாங்கம் சிகரெட் நிறுவனத்திடமிருந்து முறையாக வரி அறவிட நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்களை வகுக்கவில்லை.

ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் சிகரெட் நிறுவனத்துக்கு பல்வேறு வழிமுறையில் வரி விலக்கு வழங்கியுள்ளன.

2000 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த சிகரெட் ஒன்றின் விற்பனை விலைக்கும் நிறுவனத்திடமிருந்து அறவிடப்படும் வரிக்கும் இடையில் சமனிலை தன்மையை பேணியது, பிற்பட்ட காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் சிகரெட் நிறுவனங்களுக்கு சார்பாகவே செயற்பட்டன.

இலங்கையில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று சிகரெட் உற்பத்தி செய்கிறது. இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டு வரி விதிப்புக்கு முன்னர் பல பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளது. இவ்வருடம் மாத்திரம் 400 முதல் 500 கோடி ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டது. ஆனால் சிகரெட் உற்பத்திக்கான வரி விலக்கு 50 சதவீதத்தால் வழங்கப்பட்டது.

ஆகவே நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த நிறுவனம் பெரும் வருமானத்தில் ஒருபகுதியை அரசாங்கம் பெற்று அதனை நடுத்தர மக்களின் நலன்புரித் திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் இந்த விடயம் உள்வாங்கப்பட வேண்டும்என்பதை நிதியமைச்சரிடம் வலியுறுத்தவுள்ளோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# நட்டமடையும் அரச நிறுவனங்களின் சுமையை மக்கள் மீது தொடர்ந்தும் சுமத்த முடியாதாம்!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய இப்படிக் கருத்து



நஷ்டமடையும் அரச நிறுவனங்களின் சுமையை மக்கள் மீது தொடர்ந்தும் சுமத்த முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நட்டமடையும் அரச நிறுவனங்கள் 8 அம்ச அடிப்படையில் மறுசீரமைக்கப்படவுள்ளன எனவும் இந்த மறுசீரமைப்பு என்பது தனியார் மயப்படுத்தல் அல்ல எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, இலாபமடையும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் கூறினார்.

49 இற்கும் அதிகமான அரச நிறுவனங்களின் நஷ்டம் திறைச்சேரி ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுவதாகவும் இந்த நஷ்டத்தை நாட்டு மக்கள் மீது தொடர்ந்தும் சுமத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் போது வெளிப்படைத்தன்மை, மக்களுக்கான சேவை நலன்புரி சேவை உறுதிப்படுத்தல், தொழிலாளர்களின் தொழில் மற்றும் தொழில் உரிமை பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய தலைவர்!



இலங்கை போக்குவரத்து சபையின் புதிய தலைவராக இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி பொறியியலாளர் எஸ்.எம்.டி.எல். கே.டி.அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த வாரதொடக்கத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவை உடனடியாக இராஜினாமா செய்யுமாறு கூறியதையடுத்து இந்த நியமனம் நடந்துள்ளது.

கிங்ஸ்லி ரணவக்க தனது பதவியை இராஜினாமா செய்தாரா என்பது தெளிவாகத்தெரியவில்லை.

கிங்ஸ்லி ரணவக்க தமக்கு அறிவிக்காமல் 'பார்க் அண்ட் ரைடு பஸ் சேவையை' இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தது உட்பட தன்னிச்சையான முடிவுகளை எடுத்தார் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

அதன் பின்னர் , அமைச்சர் குணவர்தன, 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்யுமாறு கிங்ஸ்லி ரணவக்கவை பணித்தார்.

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதை தவிர மாற்றுவழியில்லை என்கிறார் ரணில்!



மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்று வழியில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் வரவு – செலவு திட்டம் மீதான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விளக்கமளித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை மின்சார சபை 1,520 கோடி ரூபா நட்டமடைய உள்ளதாகவும் 2013 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் 3 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கென வருமானம் இல்லாத நிலையில் இந்த பாரிய நிதியை பெற்றுக்கொள்ள, ஒரே தீர்வு மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது மட்டுமே என அவர் சுட்டிக்காட்டினார்.

மின்கட்டணத்தை அதிகரிக்காது மின்சாரத் துண்டிப்புகளுக்கு செல்லலாம் என்றபோதிலும், அதில் தனக்கு உடன்பாடு இல்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

# கசினோ சட்டமூலத்துக்கு நிபந்தனையுடன் அனுமதி!

## ஹர்ஷ டி சில்வா தெரிவுப்பு

கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மற்றும் கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் விதிமுறைகளுக்கு இரண்டு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, அரச நிதிக்குழுவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அரச நிதிக்குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் கசினோ சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனைக் கண்காணிப்பதற்கும் 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கசினோ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அமைப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலும் அரசாங்கத்தின் தேவையைக் கருத்தில் கொண்டும் இரண்டு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களின் இந்த வாக்குறுதியை எழுத்து மூலம் தாம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், நடவடிக்கையை மேற்கொள்கின்றார்களா எனப் பார்ப்பதற்காக மாதாந்தம் அதன் முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் கண்காணித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன், உலகில் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழே கசினோ நிறுவனங்கள் கண்காணிக்கப்படுகின்ற போதும், இலங்கையில் அவ்வாறான அதிகாரசபை இல்லை என்பதால், முன்னதாக இரண்டு தடவைகள் மேற்படி சட்ட மூலத்துக்கு அனுமதி வழங்குவதை மறுத்துள்ளதாகவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சிவபெருமான் யாருடைய ஆள் என்றால் தீர்வு?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 207**

### சந்திரிகாவின் தீர்வுப் பொதி

சந்திரிகாவின் ஆட்சியின் கீழ் தீர்வு திட்டத்துக்காக அவரது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் 08 ஜனவரி 1995இல் பேச்சுவார்த்தைகளை தொடங்கி, அவை ஏப்ரல் 1995 வரை நடந்த காலங்களில், சந்திரிகாவுக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் 43 கடிதஒ பரிமாற்றங்கள் இருந்தன. ஆனால் அவை எவற்றிலுமே 03 ஒகஸ்ட 1995 சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு திட்டம் பற்றி பேசப்பட்டு இருக்கவில்லை. அரசாங்கத்தின் நிலைப்பாடு விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் கைவிட்டு சமாதானத்துக்கு வரும்



எண்ணங்களில் இல்லை என்பதே. பேச்சு வார்த்தைகளின் முறிவின் பின் விடுதலைப் புலிகளுடன் பேசப்பட்டவற்றையும் கணக்கெடுத்து 03 ஆகஸ்ட 1995இல் தரப்பட்ட தீர்வு சமாதானத்தை விரும்புகிற மற்றைய தமிழ் மக்களை நோக்கியதாக சந்திரிகாவால் பிரச்சார படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் – அதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கணிசமான பகுதியினர் – 'பிராந்தியங்கள், அவற்றின் இணைப்பு, அதிகாரங்கள்' என்பன மாகாண சபை அமைப்புகளை விடவும் கூடியனவாகவும், இணைப்புகளும் அதிகாரங்களும் மீளப் பெற முடியாதவையாகவும் ஆக்கப்படுவதால் அதனை சாதகமாகவே பார்த்தனர்.

ஆனால் பேரினவாதங்களின் அடிப்படைகளை அறிந்து கொள்ள பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அதைப்பற்றி குறித்தவைகளை மனதில் கொள்ள வேண்டும். வெண்தாமரை (சுது நெலும்) இயக்கத்தினால் சுகததாஸ அரங்கில் ஆகஸ்ட 1995 இல் நடத்தப்பட்ட தீர்வுப் பொதியின் அறிமுக விழாவில் அவர் இந்தத் தீர்ப் பொதியை அரசாங்கம் முன் வைத்தால் அது சர்வதேச ஆதரவை பெருமளவில் தங்கள் பக்கம் பெறக்கூடியதாகவும். சர்வதேசம் இவற்றை – அதாவது அவர்களின் நல்லெண்ணங்களையும் விடுதலைப் புலிகளையும் புரிந்து கொள்வதால் – சர்வதேசத்திடமிருந்து பாரிய இராணுவ தளவாடங்களை மலிவாகவும் தமிழருக்கு எதிரான போருக்காகவும் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது எனத் தெரிவித்தார். இந்த வழியில் தான் பின்னர் வந்த நோர்வே அனுசரணை பேச்சு வார்த்தைகளில் சமஷ்டி வரைப் போகலாம் என சர்வதேசங்களுக்கு பிரச்சாரம் செய்து நிதி உதவிக்கு ரணிலின் அரசாங்கமும் சென்றது. பின் மஹிந்த இராணுவ தளபாடங்களும், சர்வதேச ஆதரவுகளையும் பெற்றுக் கொண்டார் – இதே மாதிரியான வகையில்.

நாடாளுமன்றத்தில் இரண்டில் மூன்று பங்கு வாக்குக்காக 1995இன் தீர்வு பொதி, 16 ஜனவரி 96 இலும், பின் அக்டோபர் 97 இலும் சிங்கள தரப்புகளை திருப்திப்படுத்துவதற்காக திருத்தப்பட்டது. எவ்வளவு திருத்தியும் சிங்களத் தரப்புகள் – முக்கியமாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் – அந்தப் பெரும்பான்மையைத் தர முன்வராததால் அந்த தீர்வு சந்திரிகாவால் பின்வாங்கப்பட்டது. பின்னர் எழுந்த போரினாலும் தமிழ் தரப்பின் அழுத்தங்களாலும் சர்வதேசம் நோர்வே மூலம் இணக்க பேச்சு வார்த்தைகளை நடத்தியது. அதன் அங்கங்கள் பற்றி விரிவாக இந்த பதிவுகளில் குறிப்பிட்டு விட்டமையால் அவற்றின் விவரங்களையோ அதை தொடர்ந்த முடிவுகளையோ மீளப்பதியாமல் விடுகிறேன். பொருளாதார சீர்குலைவால் நாடு குப்புற படுத்து எழும்புவதற்கு நெம்புகோல் தேடி சர்வதேசங்களின் உதவியை நம்பி இருக்கும் ரணில், இனப்பிரச்சின்சினைக்குத் தீர்வும் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கிறார். அதை பற்றி பார்ப்போம்.

அவர் நாடாளுமன்றத்தின் எல்லா கட்சிகளையும் வெளிப்படையாக தனது பேச்சில் உள்ளடக்கி இருந்தாலும், அவரது மாமனார் நாட்டி வைத்த வைத்து, இன்று விருட்சமாக வளர்ந்து நிற்கும் – சிங்கள, பௌத்த பேராண்மையைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் – மகா சங்கத்தையோ, அரசியல் துறவிகளையோ சந்தித்து எது வித தீர்வை அவர்கள் ஆதரிப்பார்கள் என்பதை வெளிப்படுத்தவில்லை. வழமை போலவே பேச்சு வார்த்தைகளின் முடிவுகள் எடுக்கப்படும் தீர்வு கூட சிங்கள பௌத்தத்தின் பாதுகாப்புக்காக இந்த தரப்புகளால் நிராகரிக்கப்படலாம்.

### திருப்தி தரும் தீர்வு

திருப்தி தரும் தீர்வின் முதல் அங்கமாக விடுதலைப் புலிகள், அவர்களது ஆளுமைகளிலும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த புலம்பெயராளர்களும் வைத்த சர்வதேச அழுத்தங்கள், தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களாக விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதும், அவை தமிழ் மக்கள் தந்த திம்புத் தீர்மானத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதும்தான்.

விடுதலைப் புலிகளை எப்பொழுதுமே இணக்கப் பேச்சு வார்த்தைகளினால் தீர்வு கண்டுகொள்ள விரும்புகிறார்கள் என்று அழுத்தம் தரப்பட்டது. எனினும் சந்திரிகாவின் அரசு அவர்களது பாரம்பரிய நிலைப்பாடுகளில் இது உள்நாட்டு பிரச்சினையாதலால் வெளிநாட்டுத் தலையீடு தேவையில்லை என்று அடம் பிடித்தாலும், பின்னர் நோர்வேதியின் இணக்கப் பேச்சு வார்த்தைகளை ஏற்றுக் கொண்டது.

ஆயுதப் பலத்தின் ஊடாக விடுதலைப் புலிகள் கூட தமிழ் மக்களின் தலைமையை முன்னெடுத்தாலும், இணக்கப் பேச்சுக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வு ஒன்றை தமிழர் தர்ப்புக்காக நிலை நாட்ட கூடிய திராணி அவர்களிடம் இருந்தது. ஆனால் சிங்களப் பேரினவாக பேராண்மைத் தரப்புகளுடன் ஓர் இணக்கத்தைப் பேச்சு வார்த்தையை முன்னெடுக்கும் ஒரு ஸ்ரீலங்கா அரசு, அந்தத் தீர்வினை நிலை நிறுத்திக் கொள்வது இயலாத காரியம் என்பதும் வரலாறுகளால் பண்டாரநாயக்கா, செல்வநாயகம் காலத்தில் இருந்து அனுபவங்களால் பெறப்பட்டவை. தமிழ் மக்கள் தேசியத்திற்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள். அதற்கு சிங்கள தேசம் ஒற்றுமையாக, எல்லா பரப்புகளும் – பௌத்தம் கூட – இணங்கி வராத பட்சத்தில் திருப்தியான தீர்வை பெற்றுக் கொள்ளும் சாத்தியங்கள் குறைவே.

புலம்பெயரில் வாழும் – நாட்டில் இருந்து 1956 இக்குப்பின் வெளியேறியோர், அன்றில் 1983இல் அடிகளால் புலம்பெயர்ந்தவர்கள் – தீர்வு என்றால் நாட்டின் இனத்தவர்கள் யாவரும் 1956 க்கு முன்னால் இணக்கமாக வாழ்ந்தது போல வாழும் வகையில் தீர்வை எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், அவர்களோ நடந்த பேரினவாதங்களால் அப்படியான நிலையை அடைய கூடுமானால் அவை நாட்டின் அமைப்பு முறைகளில் திம்புக் கோரிக்கையின் அடிப்படைகளில் எழும் தீர்வினால்தான் கைகூடும் என்பதை புரிந்து கொள்ளாமல்; தேசிய அரசியல் எனப் பறைசாற்றிக் கொண்டு தீர்வுகள் பற்றி பேசுவோர் ஏதோ தாஜா பண்ணி, அடுத்த தேர்தல் வரையான தீர்வு ஒன்று தமிழ் மக்களை சமாளிக்க பெற்றுக் கொண்டால் காணும் என்றே செயல்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களாக விடுதலைப் புலிகள் தற்போது இல்லை. அப்படி கூறவும் முடியாது. அவர்கள் உருவாக்கிய கூட்டமைப்பு – அவர்களிலும் தமிழரசு



கட்சி – காலம் காலமாக தமிழ் மக்களை அவர்களது 'வீட்டுக்காக' பிரதிநிதித்துவப்படுத்தியதெனினும் இப்பொழுது அவர்களுக்கிடையே கருத்து வேற்றுமைகள். ஜனநாயகப் பரப்பில் எத்தனையோ கட்சிகள், அரசியல் தரப்புகள் இயங்குகின்றன. அவர்களது அனுசரணையும் நிலைக்கக்கூடிய தீர்வுக்கு அவசியமாகிறது. திம்புவில் தரப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைப்பு வடிவம் தருவதெனில் அது நீதியரசர் விக்னேஸ்வரன் கூறும் இணைந்த கூட்டாட்சி, கஜேந்திரகுமாரின் தேசியம் என்ற அளவில் உருவாக வேண்டும். இந்த அளவிலாவது



நாட்டின் பிரிவினையின்றித் தீர்வினை அனுக சிங்கள தரப்புகள் இன்று உள்ள நிலையில் தயாராக இல்லை. அரசமைக்க விரும்பும் பெரும்பான்மை கட்சிகள் யாவும் சிங்கள – பௌத்த வாக்கு வங்கிகளை நம்பி இருப்பதால், வழமை போல அவர்களை திருப்திப்படுத்தும் வழியில் தான் தீர்வுத் திட்டங்களை நகர்த்துவார்கள்.

அவர்களுக்கு அடுத்த தரப்புகள் இடது சாரியினர். இனப் பிரச்சினைத் தீர்வை காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கூட தீர்க்கப்பட வேண்டிய உடனடி பிரச்சனையாக பார்த்தாலும், அதனைத் திம்புக் கோரிக்கை அடிப்படையில் பார்க்கவில்லை. ஏன் சமஷ்டி நிலைக்கே ஆதரவு தருவதில்லை. இதற்கு மேல் சிங்கள பௌத்தவாதிகளும் விமல் வீரவன்ஸ போன்ற தரப்புகள் நாட்டில் தமிழ் பிரச்சினை என்ற ஒன்றே இல்லை, இருந்தது புலிப் பிரச்சினைதான், அது அழிக்கப்பட்ட பின் தீர்வு என்று ஏன் நேரம் விரயப்படுத்த வேண்டும், இந்தியாவையும் மேலை நாடுகளையும் சீனாவைக் காட்டி அவர்களுடன் நட்புறவை பாராட்டுவதால் சமாளிக்கலாம் என்ற கருத்தியல் கொண்டவர்கள்.

நாட்டில் விடுதலை புலிகள் அழிக்கப்பட்ட பின் புலம்பெயர் நாடுகளில் அவர்கள் இந்த 13 வருடங்களும் பயங்கரவாதிகளாகவே பட்டியலிடப்பட்டு இருப்பதால், பேரினவாதத்திற்கு இனப் பிரச்சனைக்கான தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டுமா, அதற்கான நல்லெண்ணங்கள் உண்டா என்பதையும் கணக்கெடுக்க வேண்டும்.

அது அவர்களுக்கு எதுவித நல்லெண்ணத்திலும் பெரும்பான்மை கட்சிகளுக்கோ பௌத்த பீடங்களுக்கோ இல்லை. பொருளாதார வீழ்ச்சியும், ஸ்திரமற்ற அரசியலும் அவர்களை சற்று இறங்க வைக்கின்றன. ஆனால் எவ்வளவு இறங்குவார்கள்?

வாக்கு வங்கியைக் கணக்கெடுத்து இயங்கும் தமிழ் அரசியல் கட்சிகளை விடுத்தால், பழையபடி பொறுப்பு புலம்பெயர் சமூகத்திலேயே விழுகிறது. முக்கியமாக அதன் இளைய சந்ததியினரிடமும், 1990க்கு பின் போரின் கொடூரங்களையும் இனக்குரோதங்களையும் அனுபவித்து வெளியேறியவர்களது தோள்களில். அவர்கள் இதை நம்பிக்கையுடன் முன்னெடுக்கிறார்களா? எடுப்பார்களா? சர்வதேசங்களை சாதுரியமாக அனுகும் வழிகள் மேற்கொள்வார்களா ? என்பதில் தான் எதிர்காலம் தங்கி உள்ளது. அது எப்படி ஆகும் என்பதைப் பார்க்கலாம்.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

## தமிழக மீனவரின் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவோ அல்லது அவற்றை பிடிக்கும் வகையில் வலை விரித்திருக்கவோ இல்லை என்பவை உள்ளிட்ட விடயங்களை முன்வைத்தனர்.

இவற்றினை ஆராய்ந்த பின்பு 2022-11-05 அன்று பிடிக்கப்பட்ட 445ஆம் இலக்கப் படகை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## இரு வரித் திருத்தங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் உள்நாட்டு இறைவரி திருத்த மூன்றாம் வாசிப்பு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

திருத்தத்துக்கு ஆதரவாக 79 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்ற அமர்வு நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பாகி மாலை வரை இடம்பெற்றது.

இந்தநிலையில் நாடாளுமன்றம் எதிர்வரும் 13ஆம் திகதியன்று மீண்டும் கூடவுள்ளது.

## அரசமைப்புக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் விமல் வீரவன்ஸ அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

“அரசமைப்புப் பேரவைக்கு எதிர்க்கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட போது அது, தவிர்க்கப்பட்டமையானது, இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது அல்ல. - என்றார் அவர்.

நாடாளுமன்றில் நேற்று இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயர், எதிர்க்கட்சி, தரப்பில் தவிர்க்கப்பட்டமை இனப்புறக்கணிப்பு என்ற அடிப்படையில் - சிங்களவர்களின் பெரும்பான்மைவாதம் என்ற அடிப்படையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கருத்து வெளியிட்டது என்று தெரிவித்தே, உதய கம்மன்பில எம்.பி. தனது கருத்தை இப்படி வெளியிட்டார்.

# கொழும்பில் 10 மணி நேர நீர் வெட்டு!

கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இன்று 10 மணி நேர நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணி முதல் இந்த நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அம்பத்தலை நீர்விநியோக நிலையத்தின் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த நீர் விநியோகம் தடைப்படவுள்ளது.

இதன்படி கொழும்பு, தெஹிவளை, கல்கிஸ்ஸை, கோட்டே, கடுவளை மாநகர சபை, மஹரகம, பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், கொலன்னாவை நகர சபை, கொட்டிகாவத்தை, முல்லேரியா, இரத்மலானை மற்றும் கட்டுபெத்த ஆகிய பகுதிகளுக்கும் நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.









காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ், முஸ்லிம் தலைமைகளின் பேச்சுகள் மூடு மந்திரமாக அமையவே கூடாதாம்!

## நசீர் அஹமட் தெரிவிப்பு



சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு முஸ்லிம் கட்சிகளையும் அழைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தப் பேச்சுக்களை மூடிய அறைக்குள் நடத்தாமல் பகிரங்கத் தளத்தில் பேச வேண்டுமென, சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பாகப் பேச்சுகளுக்கு முஸ்லிம் கட்சிகள் மற்றும் மலையக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது எனவும் தெரிவித்துள்ள அவர் அது தொடர்பில் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளவை வருமாறு –

நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பது வரவேற்கத்தக்கது. இந்தப் பிரச்சினையால், வடக்கு,கிழக்கு மாகாணங்களில் வாழும், தமிழ் பேசும் சமூகங்களே அதிகம் பாதிக்கப்பட்டன.

எல்லோருக்கும் பொதுவான பிரச்சினை என்பதால்தான், திருமலைத் தீர்மானம், வட்டுக்கோட்டை தீர்மானங்களில் அப்போதைய தமிழ்த் தலைமைகள் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் அங்கீகரித்துச் செயற்பட்டன.

முஸ்லிம்களுக்கான தனியான அடையாளத்தை தந்தை செல்வாகூட ஏற்றிருந்தார். இதனால்தான், எமது தலைவர் அஷ்ரஃப்கூட சிறுபான்மை அரசியலுடன் இணங்கிப் பயணித்தார்.

காலப்போக்கில், இந்த ஒற்றுமைகள் இல்லாமலாகி இரு சமூகங்களும் துருவங்களாகின.

இப்போதுள்ள நிலையில், இந்தச் சமூகங்களைப் பொது அடையாளத்துக்குள் இணைப்பதற்கான முயற்சிகள் எதையும் சிறுபான்மைத் தலைமைகள் செய்யவில்லை. இதுதான் இன்றுள்ள கவலை.

இரு சமூகங்களும் அண்ணளவாக சம எண்ணிக்கையிலுள்ள கிழக்கு மாகாணத்தில் கூட, ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியாமலே உள்ளது. அதிகாரக் கெடுபிடி, நிர்வாகத் தொந்தரவு உள்ளிட்டவைகளால், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு இன்னும் அநீதியிழைக்கப்படுகிறது.

காணிகளைத் திட்டமிட்டுச் சுருட்டிக் கொள்வது பெரும்பான்மையைப் பலப்படுத்தும் நோக்குடனா? இந்த சந்தேகங்களும் மக்களிடத்தில் எழுகின்றன.

புலிகளின் கோட்பாட்டுச் சிந்தனையில் வளர்ந்த சிலரின், இந்தப் போக்குகள்தான், தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வுக்கு குறுக்காக நிற்கின்றன.

இருந்தாலும், இந்தப்போக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அரசியல் பலம் வாய்ந்த புத்தி ஜீவிகளிடமும் இருக்காது என்றே நம்புகிறோம். இவர்களுடன் பேச நாம் தயாராக இருப்பதும் இந்த நம்பிக்கையில்தான்.

என்றாலும், 2001 இல், விடப்பட்ட தவறுகள் இம்முறையும் இடம்பெறக்கூடா. முஸ்லிம்களின் தனித்தரப்பை மறுத்த பேச்சுக்கள் எவையும் வெற்றியளிக்காதென, அன்றே, நாம் அடித்துக் கூறினோம்.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் தலைமைகள் நடத்தும் பேச்சுக்கள் எவையும் மூடு மந்திரமாக இருக்கக் கூடா. வடபுல வெளியேற்றத்தை விரும்பவில்லை எனக்கூறும் தமிழ் தரப்பு, எமது மக்களை மீண்டும் அங்கு குடியேற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. வட மாகாண சபையின் கடந்த செயற்பாடுகள், இனச் சுத்திகரிப்புக்கு அமைதியான ஆதரவு வழங்குவதாகவே இருந்தன.

ஒரு கல்லையாவது நட்டு, மீள் குடியேற்றத்துக்கு சமிக்கை வழங்கியிருக்கலாம். இவற்றையெல்லாம் முஸ்லிம் தலைமைகள் மறந்திருக்கலாம். முஸ்லிம்கள் மறக்கவில்லை. வாக்குகளுக்காகவும், வெவ்வேறு வாய்ப்புகளுக்காகவும் இந்த முஸ்லிம் தலைமைகள் தலையாட்டிகளாக உள்ளனவேயன்றி, தமிழ் மொழிச் சமூகங்களின் ஒன்றிணைவு அல்லது ஒரே தீர்வுக்கு இவர்கள் உழைக்கவில்லை. என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்!

## ஜனக்க ரத்நாயக்க விடாப்பிடி




தற்போதைய சந்தர்ப்பத்தில், மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்காக, இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள, கணக்கீடுகள் சரியானவையல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

12 முறைமைகளின் அடிப்படையில் மின்சாரக் கட்டணம் தொடர்பில் இலங்கை மின்சார சபை கணக்கிட்டுள்ளது.

120 கோடி ரூபா செலவில் நீர் மின்னுற்பத்தியின் ஊடாக 4 ஆயிரத்து 600 கிகாவோட் மின்சாரத்தை தயாரிக்க முடியும் என மின்சார சபையினர் குறிப்பிட்டுள்ளனர்.

அதே அளவு மின்சாரத்தை எரிபொருளின் ஊடாகத் தயாரிப்பதற்கு 450 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை கோருகின்றனர்.

தற்போதைய தரவுகளுக்கு அமைய நீர் மின்னுற்பத்தியின் ஊடாக 5 ஆயிரம் கிகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ள போதிலும் அடுத்த ஆண்டு 4 ஆயிரம் கிகாவோட் உற்பத்தி செய்ய முடியும் என அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் அடுத்த ஆண்டு 50 சதவீதமான மின்சாரத்தை எரிபொருளின் ஊடாக உற்பத்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபை எதிர்பார்ப்பதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

# அமைச்சுப் பதவியை ஏற்க நான் தயார்!

## துமிந்த திஸாநாயக்க பகிரங்கம்



அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


பதவியேற்கத் தயாராகவுள்ள துமிந்த திஸாநாயக்க 'எப்போது அமைச்சராகப் போகின்றீர்கள்?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வேலையைப் பாரம் கொடுத்தால் இதைச் சரியாகச் செய்வார் என்று ஜனாதிபதி நினைத்து என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தால் அதை நான் ஏற்றுக்கொள்வேன்.

அதற்காகத் தருகின்ற அமைச்சைப் பாரமேற்க மாட்டேன். என்னால் செய்ய முடியும் என்று நான் உணருகின்ற அமைச்சை மட்டுமே பாரமேற்பேன். – என அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும்!

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து



பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்ளைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாடு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்ட பின்னணியில் நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட போது, பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு எட்டப்பட்டு, வரிசை யுகம் கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டு வரப்படும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது.

நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிரதமர் உட்பட அமைச்சரவை ஒத்துழைப்புடன் செயற்படுகின்றமை அவசியம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் முறையாக செயற்படுத்தப்படவில்லை. நாட்டில் பணவீக்கம் தற்போது குறைவடைந்துள்ளது, இருப்பினும் அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

பூகோள ரீதியான காரணிகள் தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணம் என்று குறிப்பிடுவதை மறுக்க முடியாது.

தேசிய கொள்கை வகுத்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பு கிடையாது. தேசிய கொள்கை வகுப்பில் தெற்கு அரசியல் கட்சிகள் முன்னிலையில் இருந்து செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் கோரப்படுவதில்லை. வடக்கு மாகாணத்தில் ஒருகாலத்தில் மீன்பிடி மற்றும் உற்பத்திகைத்தொழில் முன்னேற்றமடைந்திருந்தது. மொத்த மீன்பிடியில் மூன்றில் இரண்டு பங்கு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்த முன்னேற்றம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டது. இருப்பினும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் இந்தத் துறைகள் மீள கட்டியெழுப்பப்படவில்லை. நாட்டின் உற்பத்தி துறைகள் முறையாக மறுசீரமைத்தால் பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றமடையும்.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2022இல் வெளியிடப்பெற்றது.